கோட்டை முற்றுகை முறியடிப்பு நடவடிக்கையின்போது இறந்த சிறிலங்கா இராணுவத்தினரின் சில சடலங்கள

Registered as a News Paper in Sri Lanka   பக்கங்கள் 04   விலை ரூபா: 3·50

# ஈழநாதம்

THE EELANAATHAM   *Peoples Daily*   மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹு புரட்டாதி மீ 01 உ திங்கட்கிழமை (17-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 26 ஓசை 211

## வதந்தி தந்த அதிர்ச்சியால் பேண் மரணம்

(மானிப்பாய்)

கல்லுண்டாய் வெளியை அண்டியுள்ள முள்ளியான் பகுதியில் நேற்றுமாலை நன்கு மணியளவில் இராணுவம் ஹெலியில் இருந்து தரையிறங்கியதாக விஷமிகளால் வதந்தி ஒன்று பரப்பப்பட்டது, இதைத்தொடர்ந்து ஆனைகோட்டைச் சந்தியிலிருந்து மானிப்பாய் வரை தமது அன்றாட வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்த மக்கள் பாதுகாப்புத்தேடிமூட்டை (4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நகர் மீது பாரிய நேபாம் குண்டு வீச்சு!

## வீடுகள், வர்த்தக ஸ்தாபனங்கள் தீப்பற்றி எரிந்தன

(யாழ்ப்பாணம்)

*சிறிலங்கா விமானப்படை நேற்று வீசிய நேபாம் குண்டுகளால் யாழ். நகரின் சில பகுதிகள்- தீப்பற்றிக் கொண்டது. வானம் கரும்புகை மண்டலமாக மாறியது. அதேவேளை பீப்பாக்குண்டினால் நகரின் பல கட்டிடங்கள் தரைமட்டமாயின. இதனால் தமிழ் மக்களுக்கு பலகோடி நஷ்டம் ஏற்பட்டது*

கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளின் பின் சிறிதளவு ஓய்ந்திருந்த விமானப்படைத் தாக்குதல் நேற்று மீண்டும் திடீரென அதிகரித்தது.

நேற்றுக்காலை 10-00மணியளவிலும், மாலை 4-30மணியளவிலும் அவ்ரோ விமானங்கள் நேபாம் குண்டுகளை நகரின்மீது வீசின இக்குண்டுகள் கொட்டடி, சுற்குளம் பகுதியிலும், கஸ்தூரியார் வீதியில் இரத்தினம் கட்டடத்திற்கு எதிரேயுள்ள 'கராச்' என்பனவற்றின் மீதும்வீழ்ந்து வெடித்தன. இக் குண்டுகள் வீழ்ந்த இடங்களில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள் தீப்பற்றிக்கொண்டன. இத் தீயினால் வானம் ஒரே புகைமண்டலமாகக் காட்சி அளித்தது.

அதேவேளை வெலிங்டன் திரையரங்கில்வீழ்ந்த பீப்பாக் குண்டொன்றினால் திரையரங்கும் சூழவிருந்த கட்டடங்களும் சேதமடைந்தன.

### குண்டு வீச்சு விமான ரோந்து

இரண்டு பொம்மர்விமானங்கள் 5 45 மணியளவில்ஒன்றன் பின் ஒன்றாக வானில் ரோந்து சென்றன. அதே நேரம் ஒரு (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாவற்குளத்தில் இராணுவம்மீது தாக்குதல்

(வவுனியா)

பாவற்குளம்முதலாம்யுனிட் பகுதியில் அமைந்த முகாமிலுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் இன அழிப்புக்கும், தமிழர்களின் குடியிருப்புகளை அழிக்கும் நோக்குடனும் புல்டோசர் மற்றும் நவீன ஆயுதங்களுடன் முகாமைவிட்டு வெளியேறி வந்த போது விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை வழிமறி (4ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் மீது ஷெல் தாக்குதல்

(கிளிநொச்சி)

ஆனையிறவுசுற்றுலா விடுதியில் தங்கியிருக்கும இராணுவ முகாமுக்கு நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளினால்ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் முகாம்பலத்த சேதமடைந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதவிபரங்களை அறிய முடியவில்லை இருந்தபோதும் தாக்குதல் நடந்து சிறிது (4ஆம் பக்கம் பார்க்க)

## போராளி நோயினால் மரணமானார்

(வவுனியா)

லெப். நாஜீம் (காசிம் சுழானி பட்டாணிச்சோர் வவுனியா) நெஞ்சு வலியினால் மரணமடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக் கொள்கின்றனர்.

## காங்கேசனில் ஒரு சிப்பாய் பலி ஒருவர் காயம், படகு சேதம்

(கொழும்பு)

காங்கேசன துறை கடற்பகுதியில் படகில்வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு இராணுவம் கொல்லபபட்டதாகவும் ஒருவர் காயமடைந்ததாகவும் அவர்கள் பிரயாணம் செய்த படகு சேதமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

## வெடிக்காத நிலையில் பல குண்டுகள்; அவதானம்

(யாழ்ப்பாணம்)

குருநசர், இராஜேந்திரா வீதி, தண்ணீர் தாங்கியடி மற்றும் அதை அண்டிய பகுதிகளிலும் வெடிக்காத நிலையில் பல பீரங்கிக் குண்டுகள் பரவலாகக் காணப்படுகின்றன.

மேற்படி குண்டுகள் கடந்த வியாழக்கிழமை கோட்டை முற்றுகை முறியடிப்பு என்ற போர்வையில் மண்டைதீவுக் கடற்பகுதியில் இருந்து கண்மூடித்தனமாக சிறிலங்கா கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விழுந்தவையாகும். இதனால் பொது மக்கள் இப் பகுதிகளில் அனாவசியமாக நடமாடுவதை தவிர்க்கும்படி கேட்கப்படுகின்றனர். (றெ)

## அஸ்ரப்பின் நல்லுறவைக் குலைக்கும் முயற்சிதோல்வி

(கொழும்பு)

கிழக்கில் தமிழ் மக்களுக்கும் மூஸ்லிம் மக்களுக்கும் இடையில் நல்லுறவைப்பேண எடுத்த முயற்சியைக் குழப்ப சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவர் அஸ்ரப் எடுத்த முயற்சி தோல்வியில் முடிவுற்றதாக வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

~ மன்சூர்

பொரளையில் நடமாடும் வர்த்தகசெயலகத்தை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் மன்சூர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இடையில் நல்லுறவைப் பேணும்முகமாக கடந்தவாரம் (4ஆம் பக்கம் பார்க்க)

## உணவு போடும் முயற்சியில் பாரிய வை-12 விமானம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை விமானங்கள்நேற்றுத்தொடர்ச்சியாக கோட்டைக்கு பொதிகள் போடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன. நேற்றுக்காலையில் இருந்து மாலைவரை இம் முயற்சி நடைபெற்றது.

முதலில் காலை 10.15 மணி அளவில் ஒரு அவ்ரோ விமானம் கோட்டைக்குள் பொதிகளைப் போடும் முயற்சியில் ஈடுபட்டது. அதைத்தொடர்ந்து மாலைவரை அவ்ரோ விமானம் விட்டு விட்டு பொதிகள் போட்டவண்ணமிருந்தது அத்தோடு மாலை சீனத் தயாரிப்பான வை-12 ரக (4 ஆம் பக்கம் பார்க்க)

## காவல் அரண் அழிப்பு 1 படை பலி; ஆயுதம் மீட்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் 97 ஆம் கட்டையில் அமைந்துள்ள இராணுவ காவல் அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் காவல் அரண் முற்றாக சேதமடைந்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் பதிவு செய்யவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் வெளி மாவட்ட மாணவர்கள் அனைவரையும் இன்று காலை 8 30 மணியிலிருந்து நண்பகல் 12 மணிக்குள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுவனில் விமானப்படை இருமணி நேரத் தாக்குதல்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஆஸ்பத்திரி முன்னால் உள்ளவீதியிலிருந்து சட்டுவன் வரை நேற்றுக் காலை சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தின. இதனால் பல வீடுகள் சேதமடைந்தன.

மக்கள் பாதுகாப்பாக பதுங்கு குழிகளில் பதுங்கியிருந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

# மண்கும்பானில் 2,612 அகதிக் குடும்பங்கள்

(கொழும்புத்துறை)

மண்கும்பான் மத்தியமகா வித்தியாலயத்திலும், அருள்மிகு சிவகாமி அம்பன் ஆலயத்திலும் சுமார் 2,612 குடும்பங்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளதாக இந்த ஊர் வாசிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குப் போதிய உணவு சுகாதார, மருத்துவ வசதிகள் இன்றிக் கஷ்டப்படுவதாக யாழ். நகர் வந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (24)

## மண்ணித்தலையிலும் பீரங்கித் தாக்கு

(விசேட நிருபர்)

மண்ணித்தலைத்தீவின் மீதும் கடற்படைப் பீரங்கிப் படகு தாக்குதல் நடத்தி இருப்பதாக அங்கிருந்து கிடைத்துள்ள தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

குருநகர் பகுதியில் இருந்து தஞ்சமடைந்திருந்த அகதிகள் தெய்வாதீனமாக உயிர் பிழைத்து பாதுகாப்பான வேறிடங்களுக்கு சென்றுள்ளனரென்றும் அறியப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இத்தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் ஆயிரக்கணக்கான பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட அகதிகள் அங்கே தஞ்சமடைந்திருந்தனர்

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக மண்ணித்தலைத் தீவில் தஞ்சமடைந்திருந்த ஆயிரக்கணக்கான குருநகர் அகதிகள் உணவு, வைத்திய உதவி போன்ற அடிப்படை வசதிகளைத்தானும் பெற முடியாமல் இருந்து வந்தனரென்பதும் குறிப்பிடத்தக்கது. (21)

## முத்திரை தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் முத்திரைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள தபால் நிலையங்களில் எந்தவிதமான முத்திரைகளும் வாங்க முடியாது. இதனால் மக்கள் பெருங் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். (25)

## திருட்டு

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறையில் உள்ள புங்கன்குளம் வீதியில் உள்ள கடை ஒன்றை உடைத்த திருடர்கள் கடைக்குள் இருந்தபொருட்கள்ஒன்றையும் தவறவிடாமல்களவாடிச்சென்றுள்ளனர். இச்சம்பவம் கடந்த பதின்மூன்றாம் திகதி இடம் பெற்றுள்ளது. (43)

## பாணுக்கு முன்பதிவு

(சங்கானை)

சங்கானைச் சந்தையை அண்டிய பகுதியில் தரமான பாணுக்குப் பெயர் போன பேக௱ரி ஒன்றில் அன்றாடம் உழைப்பவர்கள் பாண் வாங்க முடியாத நிலை உள்ளது. அதே வேளை முன் கூட்டியே பேக்கரியில் பணம் கட்டிப் பெயர்களைப் பதிவு செய்த வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் பாண் விற்கப்படுகிறது. முன்கூட்டியே பதிவு செய்தவர்கள் சிலர் நான்கு முதல் பத்துறாத்தல் வரை பாணைக் கொள்வனவு செய்கிறார்களாம். இங்கு பாண் ரூபா 9.50 க்கு விற்பனையாகிறது.

## கொழும்புத்துறையில் திலீபனுக்கு அஞ்சலி

(ஈச்சமோட்டை)

தியாகி திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வீதிகள் எங்கும் தோரணங்கள் வாழைமரங்கள் கட்டப்பட்டுள்ளது விடுதலைக் கீதங்கள் இசைக்கப்படுவதுடன் தியாகி திலீபனின் உருவப்படங்கள் வீதியில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. கொழும்புத்துறையில் உள்ள கோயில்கள் அனைத்திலும் விசேட மணியோசை அடிக்கப்பட்டது அர்ச்சனை அபிசேகங்கள் என்பனவும் இடம் பெற்றன. (43)

## வீடு சேதம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை நீராவியடிப் பகுதியில் கடந்த 13ஆம் திகதி காலை சிறிலங்கா விமானப்படையால் பரவலாகக் குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டது. இக்குண்டு வீச்சினால் த. சத்தீஸ்வரன் ஆசிரியரின் வீடும் பாரிய சேதங்சளுக்குள்ளாகியது.

கைக்குழந்தையுடன் பெற்றோர் பதுங்குகுழியில் இருந்ததினால் உயிர் பிழைத்தனர்.

## மகோற்சவம்

(பருத்தித்துறை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது அடுத்தமாதம் 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 4 ஆம் திகதி கடற்தீர்த்தத் திருவிழாவும் மறுநாளான 5 ஆம் திகதி கேணித் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (25)

## முதலுதவிச் சேவை நிலையம்

(கோப்பாய்)

கோப்பாய் பிரிவு சென். யோன்ஸ் அம்புலன்ஸ் படையினரால் உசய தாரகை சனசமூக நிலையத்தில் எதிர்வரும் புதன் கிழமை (19. 9. 90) அன்று பொதுமக்களின் நன்மை கருதி முதலுதவி சேவை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது இச்சேவை நிலையம் தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்கும் என்று கோப்பாய் அத்தியட்சகர் சோ. சத்தியேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் அகதிகள்

(பருத்தித்துறை)

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்துள்ள பல குடும்பங்கள் கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளனர். தஞ்சமடைந்துள்ள குடும்பங்களுக்கு வேண்டிய உதவிகளைக் கற்கோவளம் சிற்றூரவை மேற் கொண்டு வருகின்றது. (25)

## நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

(கோப்பாய்)

புத்தூர் கிழக்கு ஸ்ரீ குமரகுருபரன்சனசமூகநிலையகால நடப்பு வருட நிர்வாக சபை உறுப்பினராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சு. அருள்லிங்கம், செயலாளர்: த. இராஜரத்தினம், பொருளாளர். மு. இரவீந்திரன், போசகர்: த. செல்வகுமார். ஆறு பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தடுப்பூசி ஏற்றப்படுகிறது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் சிகிச்சை நிலையத்தில், பிரதி சனிக்கிழமைகள் தோறும் குழந்தைகளுக்கான தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படும் என்றும். தாய்மார் தமது குழந்தைகளுக்கு தவறாது முக்கூட்டு தடுப்பு ஊசி மருந்தை ஏற்றிக் கொள்ளும்படி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தா. சிவபாதம் அறிவித்துள்ளார். (35)

## இடி தாக்கியது

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் இடி தாக்குதல் பெரும் சத்தத்துடன் வானிலிருந்து மரமொன்றின் மீது விழுந்துள்ளது. இச் சத்தத்தைக்கேட்ட இப்பகுதி மக்கள், விமானம் குண்டுவீசுவதாக எண்ணி பயந்து ஓடி மறைந்து கொண்டனர். சிறிது நேரத்தின் பின்னரே அது இடியோசை எனத்தெரிவந்தது.

இச் சம்பவம் நேற்று முன் தினம் பகல் நடை பெற்றது. (35)

## பனம்பழத் திருட்டு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் பனம் பழத்திற்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் பனம் பழத்திருட்டுக்களும் அதிகரித்துள்ளன. பனம் பழத் திருட்டினால் அடிக்கடி பல இடங்களில் சண்டைகளும் இடம் பெற்று வருகின்றன (25)

## தென்மராட்சியில் திலீபனுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் மூன்றாம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு தமிழீழத்தின் பல பகுதிகளிலும் வாழை, தோரணங்கள் கட்டி தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்துகின்றனர்.

மேலும் நாவற்குழி. கைதடி, நுணாவில், சாவகச்சேரி, தச்சன்தோப்பு, தனங்களப்பு ஆகிய இடங்களிலும் திலீபனின் உருவப்படத்தை அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைத்திருப்பதை அவதானிக்க முடிகிறது. அத்துடன் அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் ஒலிபெருக்கி மூலம் எழுச்சிப்பாடல்கள் திலீபனின் உரைகள் ஒலிக்கப்படுகின்றன. மக்கள் வீதிகள் தோறும் நின்று தியாகி திலீபனின் யாழ் கோட்டை பற்றிய உணர்ச்சி பூர்வமான பேச்சை கேட்பதை அவதானிக்க முடிகிறது. (றெ)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பன்னிரண்டு நாளாய் பைந்தமிழர் வாழ்வுக்காய்!
பாரமில்லாப் பொன்னுடலை வருத்திய மாவீரன்
கண்ணீரண்டை மூடிக் கனிவான பயணமதை
கண்ணீரின் மத்தியிலே தொடங்கியதால்
துன்பப் பெருக்காலே துவண்டதங்கே மக்கள்படை
தூயஒளி ஒன்று தியாக விளக்கேற்றி
மண்ணுலகில் அஹிம்சை மலரொன்று பூப்பதற்கு
மகத்துவமாய் அங்கே மரித்ததடா!

காந்தியினைப் போற்றும் கறைபடிந்த கண்களவை
காவியத் தலைவணைக் காணாமல் போனதேன்
சாந்தி... சமாதானம் சமத்துவம்தான் வேண்டுமென்று
சாற்றுகின்ற புல்லரவர் சத்தியத்தைச் சிதைத்ததேன்?
நீந்திவரும் வெண்ணிலவு நினைவிழந்து போனதுபோல்
நேசமகன் எம்மைவிட்டு நெடுந்தூரம் போனதேன்?
காந்திக்கே சரியான பாதையினைக் காட்டியவன்
காவியமாய் இம் மண்ணில் என்றும் வாழ்வான்!

தொண்டமானாறு வடக்கு,
தொண்டமானாறு தெற்கு,
கெருடாவில் தெற்கு,
கெருடாவில் கிழக்கு
சிற்றூரவைகள்

(B. 1391)

---

## 95 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில்
14 | 11 | 1969



தாயக மண்ணில்
16 | 06 | 1990

2ஆவது லெப். **ஸ்ராலின்**
**ச. தயபாலசிங்கம் (தயா)**

வேங்கை நீ மடிந்ததில்லை - உன்
வீரமும் குறைந்ததில்லை
ஓங்கிய போர்முனையில் நீ
ஒதுங்கியும் நின்றதில்லை
பாங்குடன் போர் புரிந்து - நீ
பகைவரை வீழ்த்தும் வேளை
தாங்கினாய் நெஞ்சில் குண்டை
தமிழ் அன்னை சிலிர்த்தே போனாள்.

நெஞ்சினில் குண்டு தாங்கி
நிமிர்ந்து நீ பார்த்த வேளை
வஞ்சக எதிரி அங்கே
அஞ்சியே நிற்கக் கண்டு
பொங்கிடும் சினம் அடக்கி - உன்
பொன்னுயிர் தனை எடுத்து - தமிழ்
அன்னையின் மடியில் வைத்தாய்
அவள் உடல் சிலிர்த்தன்றோ.

அன்னையை முத்தமிட்டாய்
அவளையே அணைத்தும் கொண்டாய் - உன்
கண்ணிலே அவளைத் தாங்கி
கையிலே ''ஏகே'' தாங்கி - தமிழ்
மண்ணிலே உறங்கி விட்ட
''ஸ்ராலினே'' உன் இலட்சியம் - எம்
மண்ணிலே நிலைக்குமடா - உன்
புகழ் சிறக்குமடா.

பெற்றோர், சகோதரர், மைத்துனர்,
மருமக்கள், நண்பர்கள்.

(B. 1392)

## சிந்தனைக்கு

அடிமைத்தனத்தை அறுக்கும் ஆற்றல்
அடிமை ஒவ்வொருவன் சொந்தக் கையிலேயே உள்ளது
— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 17-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த பெ எண் 05

# தெற்கில் இருந்து தீர்வு வராது

இனப்பிரச்சினைத் தீர்விற்கு பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வுகள் என்ற முனகல்கள் தெற்கிலிருந்து கேட்கின்றன.

கடந்தவார இறுதியில் நடந்த சர்வகட்சி மாநாட்டில் இராணுவத்தீர்வு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாது என ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஆனால் இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தெற்கிலிருந்து ஒரு அரசியல் தீர்வு ஏற்படப் போவதில்லை என்பதே உண்மை இதற்கு கடந்தகால வரலாறுகளே சான்றுபகரும். அதேபோன்று தற்போதைய நிகழ்வுகளும் அதையே வலியுறுத்துகின்றன.

நாடு எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை, தாம் ஆட்சி அதிகாரத்திற்கு வருதலையே நோக்கமாகக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளே தென்னிலங்கையில் இருப்பதனால் ஒருபோதும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

தென்னிலங்கை அரசியல் கட்சிகளில் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எப்பொழுதும் இரு விடயத்தில் மட்டுமே ஒத்த நோக்குக் கொண்டுள்ளார்கள் ஒன்று தமிழர்களை அழித்தொழிப்பது இரண்டாவது ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தேசிய நலன் எதிலும் அக்கறை கொள்ளாது ஆளும் கட்சிக்கு எதிராகத் தொழிற்படுவது.

இந்நிலையில் தமிழர் மீதான அடக்குமுறை, இராணுவ நடவடிக்கை என்பனவற்றிற்கு ஆதரவு கொடுக்கும் எதிர்க்கட்சிகள், இராணுவ நடவடிக்கையால் பிரச்சினை தீராது என்றபோதும், அரசியல் தீர்வு பற்றி அரசாங்கம் பேசும்போது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதில்லை.

எடுத்துக்காட்டாக தமிழ் மக்கள் மீது யூன் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு ஒத்துக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி யு என். பி. அரசால் தமிழரின் பிரச்சினை பற்றி ஆராயக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டிற்குச் சமுகம் கொடுக்கவில்லை. அதாவது ஒத்துழைப்பு வழங்கவில்லை.

அதேவேளை அரசாங்கமும் அரசியல் தீர்வு பற்றி பேசி ஒரு கால அவகாசத்தை பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கால அவகாசத்தைப் பயன்படுத்தி இராணுவத்தினரின் தொகையையும், இராணுவத் தளபாடங்களையும் பெருக்குவதே அரசாங்கத்தின் திட்டமாகும். இதனை அரசாங்கம் பாதுகாப்புக்கென ஒதுக்கியுள்ள பெருந்தொகை (1700 கோடி ரூபா) நிதியிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அத்தோடு இன்றைய சர்வதேச நிலைபரம் பாதகமாக இருப்பதினாலும் அரசாங்கம் அரசியல் தீர்வு பற்றி கதைக்கத் தொடங்கியுள்ளது.

இந்த அரசியல் கட்சிகளுக்கும் மேலாக பௌத்த சங்கங்கள் ஒருபோதும் தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படக்கூடிய அரசியல்தீர்வுகளுக்கு விட்டுக்கொடுக்கப் போவதில்லை. அரசியல் மயப்படுத்தப்பட்ட பௌத்த சங்கங்கள் இலங்கைத்தீவு பூராவுமே பௌத்தருக்காகவே தத்தம் செய்யப்பட்ட பூமி என்ற கோட்பாட்டைக் கொண்டவர்கள்.

இந்நிலையில் பௌத்தசிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து ஒருபோதும் தமிழரின் நியாயமான உரிமைகள் வழங்கப்படும் என்பதற்கில்லை. ஆகையினால் தமிழர் உரிமைகளைப் பெறவேண்டுமாகில் போராடிப் பெற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய ஒருபோதும் பேச்சுவார்த்தை மூலம் பெற்றுக்கொள்ள முடியாது. அதாவது தெற்கிலிருந்து ஒருபோதும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வராது.

# எனது சாம்பல் மேட்டிலிருந்து



''அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய தமிழ் மக்களே! அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்! நிற்க வலுவில்லை இருந்து கொண்டே பேசுகிறேன். நாளை நான் சுய நினைவோடு இருப்பேனோ தெரியாது. அதனால் தான் உங்களுடன் பேசவேண்டுமென விரும்பினேன் நாம் எமது இலட்சியத்தில்மிக உறுதியாக இருக்கின்றோம். ஏற்கனவே அறுநூற்று ஐம்பது பேர் இலட்சியத்திற்காக மரணித்துவிட்டனர்.

மில்லர் கடைசியாக போகும் போது என்னிடம் ஒரு வரியைக் கூறினான். 'நான் எனது தாய் நாட்டிற்காக உயிரைக் கொடுக்கப் போவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன் ஆனால்

# புதிய அத்தியாயம் எழுதவேண்டும்

ஒரே ஒரு ஏக்கம் எனது மக்கள் விடுதலையாகும் காட்சியை என்னால் காண முடியாமல் போகிறதே என்பதே அந்த ஏக்கமாகும் எனக்கூறி விட்டு வெடிமருந்துகளை உடைய வாகனத்தில் ஏறிச் சென்றான்.

எனக்கு முன்சென்ற அறுநூற்றி ஐம்பது பேரும் எனக்குத் தெரியவே இறந்தார்கள் அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். நான் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக தலைவரிடம் அனுமதிகோரிய போது, திலீபன் நீ முன்னால் போ! நான் பின்னால் வருகிறேன் எனக்கூறி எனக்கு உற்சாகமூட்டினார். அவ்வளவு தூரம் தெளிவான தலைவர் தான். தனது உயிரையும் சிறிதும் மதியாத தலைவர்தான் உங்களுக்கு கிடைத்துள்ளார் நான் தலைவரிலும் குறைவான நேரமே இப்போது இருந்துள்ளேன் இப்போது விளங்குகிறது எனக்கு என் தலைவரின் கொள்கைப் பிடிப்பு.

தாய்மார்களே! பெரும் வீரனின தலைமையில் நீங்கள் கிளம்புங்கள்! ஓர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும் நாங்கள் நிச்சயமாக தமிழீழம் காண்போம் நான் அதை வானிலிருந்து எனது அறுநூற்றி ஐம்பது தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மன ரீதியாக தற்போது நான் உணர்கிறேன். என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.

எமது மக்களின் விடிவிற்காக நான் பூரண மனத்திருப்தியுடன் இந்த உண்ணாவிரதத்தில் இறங்கினேன் எனக்கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தமதுயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை நினைக்கிறார்கள். தெளிவான, உறுதியான இலட்சியத்துடன் இருக்கிறார்கள். எமது இறுதி இலட்சியத்தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடைய வேண்டும் என்பதே எனது இறுதி ஆசை. வணக்கம்.

ஐந்தம்சக் கோரிக்கையை முன்வைத்து 15 09 1987இல் தியாகவேங்கை திலீபன் உண்ணாவிரதம் மேற்கொண்ட அன்று மேடையின் முன்னால் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் முன் ஆற்றிய புகழ்பெற்ற பேச்சு இதுவாகும்.

# சவுதிக்கு அமெரிக்க ஆயுத விற்பனை மேற்காசிய சமநிலையைப் பாதிக்கும்

(வாஷிங்டன்)

சவுதி அரேபியாவிற்கு 2000 கோடி டொலருக்கு மேலாக இராணுவத் தளபாடங்கள் விற்பனை செய்யப்படுவதை அமெரிக்கா நேற்று உறுதிப் படுத்தியது.

இவ் இராணுவத் தளபாட விற்பனை அமெரிக்கா ஆயுத உற்பத்தியாளருக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாகக் கருதப்படுகின்றது.

ஆயுத விற்பனையால் சவுதி அரேபிய இராணுவம் இப்பொழுது உள்ளதைவிட மும்மடங்கு பலம் பெறும் என்றும், விமானப்படை இரண்டு மடங்கு பலம்பெறும் என்றும் மேற்குலக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை இவ் இராணுவத் தளபாட விநியோகத்தால் மேற்காசியாவின் இராணுவச் சமநிலை மாற்றமடையும் என்றும், ஈராக்கிய இராணுவத்திற்கு ஓரளவு நிகரான இராணுவம் உருவாக்கப்படும் எனவும் அவ் இராணுவ வட்டாரங்கள் கருதுகின்றன.

# பாகிஸ்தான் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையீடு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் உள் விவகாரங்களில் அமெரிக்கா எந்த வித முகாந்தரமும் இல்லாமல் தலையிடுவதாக பாகிஸ்தான் அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

வாசிங்டனில் அமெரிக்காவிற்கான அமெரிக்கத்தூதுவர் ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில் பெனாசிர் பூட்டோவின் ஊழல் விவகாரம குறித்து தற்போதைய அரசிற்கு எதிராக பிரஸ்தாபித்தைத் தொடர்ந்தே பாகிஸ்தான் இவ்வறு தெரிவித்துள்ளது.

பாகிஸதான் வெளியுறவுச் செயலகத்திற்கு அமெரிக்காவின் இரண்டாவது தூதுவர் வரவழைக்கப்பட்டு இவ் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது இவ் ஆட்சேபத்தில் பாகிஸ்தானின் உள் நாட்டு விவகாரம் அமெரிக்காவிற்கு தேவையற்ற செயல் எனத் தெரிவிக்கப்பட்டதாம்.

# ஜேர்மன் 200 கோடி டாலர் உதவி

வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிரான நடவடிக்கைக்கு என மேற்கு ஜேர்மன் அரசாங்கம் 200 கோடி அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோலைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே ஜேர்மன் இவ்வுதவியை அளித்துள்ளது.

அதேவேளை வளைகுடாவில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலையால் பாதிக்கப்பட்ட எகிப்து, ஜோர்டான், துருக்கி ஆகிய நாடுகளுக்கும், இவ்உதவியில் சிறுபகுதி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிகின்றது. அதேவேளை ஜப்பானும் 100 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கற்கோவளம் பகுதியில் மீனவர் இன்றி மீன்பிடிக் கட்டுமரம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் உள்ள கற்கோவளக் கடலில் மீனவர்கள் இன்றி வலைகளுடன் மீன்பிடிக்கட்டு மரமொன்று தத்தளித்துக் கொண்டிருக்க கற்கோவளம் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளது.

இக்கட்டு மரத்தில் வலைகளுடன் சாரமும், சேட்டும் மாத்திரம் காணப்பட்டன.

மீனவர்களால் மீட்கப்பட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

# சர்வசன வாக்கெடுப்பின்றி

# வடக்கு - கிழக்கு இணைப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கை சர்வசன வாக்கெடுப்பின்றியே இணைப்பமதென சர்வகட்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த செவ்வாய்க்கிழமைசிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் கலந்து கொள்ளவில்லை.

அதேவேளை வடக்கு-கிழககில் உள்ள சிங்கள, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத்தீர்க்கும் முகமாகச் சட்டங்கள் இயற்றப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இம் மகாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி தமிழர் பிரச்சினைக்கு அரசியற்தீர்வே காணப்படவேண்டும் என்றும், இராணுவத் தீர்வு சாத்தியப்படாது எனவும் தெரிவித்தார்.

## வட்டுக்கோட்டைப் பகுதியில் திலீபனின் நினைவஞ்சலி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைத் தொகுதியின் பல பகுதிகளிலும் நேற்றுத் திலீபனுக்கு அஞ்சலிக் கூட்டங்கள நடைபெற்றன.

மூளாய், பொன்னாலை ஆகியஇடங்களில்நடைபெற்ற அஞ்சலிக்கூட்டங்களில் விடுதலைப் புலிகளின் வட்டுக்கோட்டைப் பிரதேசப் பொறுப்பாளர் கலந்து கொண்டு உரையாற்றுகையில் திலீபனின் கனவை நனவாக்குவதே திலீபனுக்கு நாம் செய்யும் தலையாய அஞ்சலியாகும் என்றார்

தொடர்ந்து சிற்றூர்,வட்ட அவைகளின் உறுப்பினர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

## கப்டன் ஹீரோராஜிற்கு வீர அஞ்சலி

(அச்செழு)

வீரமரணம் அடைந்த கப்டன் ஹீரோராஜின் (ச.பிரபாகரன்) பூதடவுல் நேற்று மாலை அவரது சொந்த ஊரான அச்செழுவிலுள்ள மயானத்தில் இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது

கோட்டை இராணுவ முகாமிற்கு அண்மையில் நேற்று முன்தினம் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி வீரமரணமடைந்த இவர் சிறிலங்கா இராணுவத்துடனும், பின் இந்திய இராணுவத்துடனும் பல களங்களில் போரிட்டவராவர். இந்திய இராணுவத்துடனான யுத்தததிற் காயமடைந்த இவர் இந்தியாவில் கைதாகி இரண்டு வருடங்களுக்கு மேல் 'அமைதிப்படை' முகாமில் சிறை வைக்சப்பட்டிருந்தார்.

இவரது மரணச் சடங்கில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

## லக்டோஜன் விலை 210 ரூபா

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் லக்டோஜன் பால் மா 210 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருன்றது.

இன்று யாழ். குடாநாட்டில் பால் மாவுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமப்பட வேண்டியுள்ளது (24)

### கட்டுவனில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

தாக்குதல் இரண்டு மணி நேரம் தெடர்ந்து இடம்பெற்றது. (நி)

### உணவு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமானம் வழமைக்கு மாறாக பொதிகள் போடும் முயற்சியில் ஈடுபட்டது. ஒரே தடவையில் ஐந்து ஆறு பொதிகளை போட்ட இவ் விமானம் ஆறு தடவைகள் பொதிகளைப் போட்டது. (றெ)

### வதந்தி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிச்சுகளுடன் சிதறி ஓடினார்கள்.

இதேவேளை மானிப்பாய் கல்லுண்டாய்ப் பகுதியில் ஹெலிகள் இரண்டு வானில் வட்டமிட்டுப் பறந்துகொண்டிருந்தன.

இது பொய்வதந்தி என்று இளைஞர் சிலர் ஊர்ஜிதப்படுத்தவே பாதுகாப்புத் தடி வீதிகளில் சென்றுகொண்டிருந்த மக்கள் உடன் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

இவ் வதந்தியைக் கேள்வியுற்ற மானிப்பாயைச் சேர்ந்த திருமதி துரைசிங்கம் மலர் என்பவர் அதிர்ச்சியினால் மரணமானார்.

விடுதலைப் புலிகள் அவ்விடம் விரைந்து பொது மக்கள் உதவியுடன் வதந்தி பரப்பியவரை உடன் கைது செய்தனர்.

### அஸ்ரப்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்முனையில் கூட்டப்பட்ட பலகட்சிகளின் கூட்டத்தையே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் குழப்ப முற்பட்டதாக மன்சூர் தெரிவித்தார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ், முஸ்லிம மக்களிடையே உள்ள நல்லெண்ணம் கொண்டவர்களால் அஸ்ரப்பின் முயற்சி தோல்வியடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

### முகாம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் அம்முகாமருகே இரண்டு தடவைகள் ஹெலிகொப்டர்கள் இறங்கிச்சென்றன இந்தஹெலிகொப்டர்கள் காயமடைந்தவர்களை ஏற்றிச் சென்றிருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

### பாவற்குளத்தில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்துத் தாக்குதல் நடத்தினர். இத தாக்குதலினால் நிலை தடுமாறிய இராணுவத்தினர் மீண்டும் இராணுவமுகாமுக்கு சென்றனர்.

இராணுவமுகாமில் இருந்து கொண்டு முகாம் சுற்றாடல் பகுதியில் மூர்க்கத்தனமாக ஷெல் தாக்குதல நடத்தினர். இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்களை அறிய முடியவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மலிவான விலையில் திருட்டு இறைச்சி

(ஈச்சமோட்டை)

வீடுகளை விட்டு தூரஇடங்களுக்குச் சென்று அகதிகளாக இருப்போர் பலர் தமது கால் நடைகள், கோழிசள் என்பவற்றைஇழந்துள்ளனர் இந்த கால்நடைகளை சில விஷமிகள் பிடித்துவெட்டுவதாகவும் மலிவான விலையில் ஆடு வெட்டி இறைச்சி கிலோ 50/- ஆக விற்பனையாவதும் குறிப்பிடத்தக்கது. இப்படியான விஷமிகள் சிலர் பொதுமக்களிடம் சிக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)

## காட்சி மிருகங்கள் இராணுவத்திற்கு உணவாயின

(லண்டன்)

குவைத் மிருகக் காட்சிச் சாலையில் இருந்த சாப்பிடக்கூடிய விலங்குகளில் முக்கால் வாசிக்கு மேற்பட்டவற்றை ஈராக்கிய இராணுவத்தினர் சாப்பிட்டு விட்டதாக உலக விலங்குகள் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஐம்பெரும் விழாவில் பிரதமர் வி.பி.சிங்

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகம் நடாத்தும் ஐம்பெரும் விழாவில் கலந்து கொள்வதற்காக பாரதப் பிரதமர் திரு. வி. பி. நேற்று தமிழ்நாடு வந்தடைந்தார். வி.பி. சிங்குடன் என்.டி. ராமராவ், அமைச்சர் அஜித்சிங், ஜனதாதள் கட்சித் தலைவர் பொம்மை ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர். இவ்விழாவில் லட்சக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

## பூநகரி பாடசாலையில் அகதி முகாம்

(கொழும்புத்துறை)

பூநகரி பிரதேசப் பகுதியில் உள்ள அனேக பாடசாலைகளில் வவுனியா, முல்லைத்தீவு, திருக்கோணமலை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல் ஆயிரக்கணக்கான அகதிமக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

போதிய சுகாதார, மருத்துவ, உணவு வசதியின்றி இவர்கள் பெரும் சிரமப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரைஇங்குள்ளஅகதி மக்களுககு அரச நிறுவனங்களின் உதவிகள் எதுவும் கிடைக்கவில்லையென மக்கள் மனவேதனை அடைந்துள்ளனர்.

### யாழ்.நகர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிக்கொப்ரர் கடற்கரையோரப் பகுதிகளில் கலிபர் வேட்டுக்களைத் தீர்த்தது. மண்டைதீவில் நிலைகொண்டுள்ள படையினர் தொடர்ச்சியான ஷெல்,பீரங்கி, கலிபர் வேட்டுக்களையும் மேற்கொண்டனர்.

### காவல் அரண்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரணில் இருந்த ஒரு இராணுவ வீரர் பலியானதுடன் 303 ரைபில் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது.

இந்திய - இலங்கை

## கடல் எல்லை ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகும்

(சென்னை)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் எல்லை தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும், அது விரைவில் கைச்சாத்திடப்படும் எனவும் தென்பிராந்திய கடற்படைத் தளபதி திரு. காதிக் சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் அடிக்கடி சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் தாக்கப்படுவதைத் தொடர்ந்தே மேற்படி பேச்சுவார்த்தை துரிதமடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டைப் பகுதியில் மேலும்ஆயுதங்கள்மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோட்டைப்பகுதியில் இருந்து மேலும் பல ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. கடந்த வியாழக்கிழமை சண்டையில்கொல்லப்பட்ட இராணுவத்தினரிடம் இருந்தே இந்த ஆயுதங்கள் கைப்பறறப்பட்டன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ரீ - 56-2 ரக துப்பாக்கி இரண்டு, ரீ-56 ரக துப்பாக்கி ஒன்று, ரீ - 81-1 துப்பாக்கி இரண்டு, 60 மி. மீ. மோட்டார் 01, 203 ரகஷெல் 06, ஆர். பீ. டீ. எல். எம். ஜி. ரவைக்கூடு 1, ஏ. கே. ரவைக்கூடு 05, ரவைகள் 113 என்பன கைப்பற்றப்பட்டவைகளாகும்.


### மாணவர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு மட். அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## திலீபன் நினைவாக....

உறுதியின் உறைவிடம்



26 . 09 . 87

அன்று தான்
நட்சத்திரங்கள் முதன் முதலில்
மின்ன மறந்த நாள்
நிலையற்ற மனிதர்களைப் பார்த்து
சிரித்துக் கொண்டிருப்பவைகள்
கண்ணிமைக்க மறந்த நாள்
ஓ! திலீபன் எனும் வெளிச்சம்
விடை பெற்றுக்கொண்டதனாலோ?
திலீபன் ஊரெழுவில் உதித்த
உதய சூரியன்......
வயிற்றினிலே (தி) யாக வேள்வியை
நடத்தி முடித்த மாமுனிவன்
தமிழீழத்தின் முட்பாதைகளில் நடந்து
ரத்தம் சிந்தி, அதை தன் பேனாக்களுக்கு
மையாக்கிக்கொண்ட மாவீரன!
காந்தியின் கல்லறைகள்
தகர்ந்து போயினவாமே
அது திலீபனின் இறுகி நாள் முனகல்களினாலோ?
அஹிம்சையைச் சுட்டெரித்து
அதன் சாம்பரை நெற்றியில் பூசியிருக்கும்
இந்தியர்களை இனம் காட்டிய எங்கள் திலீபா
உன உறைந்து போன மேனி
எம் உறுதிக்கு உரமூட்டுகிறது......

- சாளி
(08 . 08 . 89)

(திலீபனின் இரண்டாமாண்டு நினைவு நாள் காங்கேசன்துறை IPKF முகாமில் சிறை வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் உறுப்பினர்களாலும், ஆதரவாளர்களாலும் சிறையிலேயே ரகசியமானமுறையில் கொண்டாடப்பட்டபோது 'தியாக திலீபம்' என்ற கவிதைகள், ஓவியங்களை உள்ளடக்கிய கையெழுத்து மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அம்மலரில் வெளியான மறைந்த வேங்கை கப்டன்'சாளி'யின் கவிதை இதுவாகும்.)